**25 பழியஞ்சினபடலம்**

குலோதுங்க பாண்டியன் ஆண்ட காலத்தில் திருப்பத்தூரிலிருந்து ஓர் அந்தணர் தம் மனைவி குழந்தையுடன், மதுரையை நோக்கி வந்துக் கொண்டிருந்தான். அவர்களுக்கு தாகம்ஏற்பட்டதால், குழந்தையையும் மனைவியையும் ஓர் ஆலமரத்தடியில் இளைப்பாற செய்துஅவன் குடிக்க தண்ணீர் தேடிச் சென்றான்.

அந்த ஆலமரத்தின் என்றோ ஓர் வேடனால் எய்யப்பட்ட கூறிய அம்பு ஒன்று சிக்கிக்கொண்டிருந்து. காற்றின் அசைவால் அந்த அம்பு மர நிழலில் சோர்வுடன் படுத்திருந்தஅப்பெண்ணின் வயிற்றில் பாய்ந்து அவள் இறந்து விட்டாள். அச்சமயம் ஓர் வேடன் அதேமரத்தின் மறு பக்கம் இளைப்பாற அமர நிழலில் அமர்ந்தான்.

தண்ணீர் கொண்டு வந்த அந்த அந்தணன் தன் மனைவியின் நிலைக்க கண்டு, வெகுண்டு, மரத்தின் கீழ் இளைப் பாற வந்த வேடன் மீது ஐயம் கொண்டு, அரசரிடம் சென்று முறையிட்டான்.

அரசன்விசாரணைசெய்ததில்தான்இளைப்பாறத்தான்அம்மரத்தடிக்கு வந்ததாகவும், தான்அம்புஎய்யவில்லை எனவும், அந்த அம்புயாருடையது என்பது தனக்குத் தெரியாது என்று கூறினான். கடும் தண்டனைப் பெற்றும் அவன் கூறியதையே திரும்பத் திரும்ப கூறினான். அரசனுக்கும் அவன் கூறுவதில் உண்மை இருப்பதாகவே தோன்றிற்று. வேறு எவரேனும் மிருங்கங்களை வேட்டையாட எறிந்த அந்த அம்பு, அந்தணனின் மனைவி மீது பட்டிருக்கும் என்ற ஐயம் தோன்றிற்று. அந்தணனிடம் தான் தீர ஆராய்ந்த பின் தீர்ப்பளிபதாக கூறி, அந்த வேடனை சிறையில் அடைத்தான்.

மனைவியின் ஈமக் கடன்களை முடித்து திரும்பிய அந்தணனுடன், சோமசுந்தரகடவுளின் திருக்கோயினுள் சென்று உண்மையை யறி ய தனக்கு அருளுமாறு வேண்டினான் மன்னன்.

அப்போது விண்ணிலிருந்து அந்நகரில் நடக்கும் செட்டி வீட்டுத் திருமணத்திற்குஅந்தணனோடு சென்றால் அவன் சந்தேகம் நீங்கும் என்று அசரீரி குரல் கேட்டது. அங்கு சென்றஅவர்களுக்கு சோம-சுந்தரரின் அருளால் எமதூதர்கள் இருவர் உரையாடுவது காதில் வீழ்ந்தது.

ஒரு நோயும் இல்லாத அந்த மணமகனை எவ்வாறு தங்களது தலைவனது ஆணைப் படி இறக்கச் செய்வது என்று ஒருவன் வினவினான். மற்றவன் அதற்கு அன்றைய பகலில், ஆலமரத்தின் முன்பே சிக்கிக் கிடந்த அம்பை, காற்றின் அசைவைக் கொண்டு வீழ்த்தி அந்தணனின் மனைவியின் உயிரைக் கவர்ந்ததுபோல், கன்றை ஈன்ற பசுவினை மணவிழாவின் ஆரவாரத்தினால்

கயிற்றை அறுத்துக் கொண்டு, வெகுண்டு ஓடச் செய்து மணமகனின் உயிரைக் கவரலாம் என்றான். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த அரசனும், அந்தணனும் அவர்களின்கூற்றின் படி நடந்தால் அந்தணனின் மனைவி இறந்ததும் அவ்வாறே என்று எண்ணினர்.

சிறிதுநேரத்தில்கட்டியகயிற்றினைஅறுத்துக்கொண்டு, அலறியவாறு பசு ஒன்று மணமகனை முட்டி கொன்றது. இதனைக் கண்ட அந்தணனும் மன்னனும் உண்மையை அறிந்தார்கள். வேடனுக்கு இழைத்த அநீதிக்கு வருந்திய மன்னன் அவனுக்கு பல பரிசுகள் கொடுத்தனுப்பினான். தனக்கு உண்மையை உணர்த்தி அருளிய ஆண்டவனை மனமாற துதித்தான் பாண்டியன்.

**பல்லவி**

மரத்தினின்று வீழ்ந்த அம்பு மனைவியை மாய்த்திட
மரத்தின் பின் இருந்தவனை கொலைகாரன் என நினைத்து

**அனுபல்லவி**

அரசன் முன் அழைத்துச் செல்ல அவனும் - குழம்பியதால்
அசரீரியாக ஓர் மண மேடை செல்லச் சொன்னீர்

**சரணம்**

எவனோ எய்த அம்பு மரத்தில் தொங்கி வீழ
இறந்த பெண்ணைப் போலவே இவனும் - மணக்கோலத்தில்
சவமாக வீழவே பசுவை முட்டச் செய்ய
சதி பேசின யமதூதர் பேச்சினைக் கேட்கச் செய்தாய்